Individual.

**சுருக்கம்**

பொதுப்பணிகள் - வேளாண்மை-உழவர் நலத்துறை - வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம்- கருணையடிப்படையில் திருமதி. சு.சுஜிதா இளநிலை உதவியாளராக தேனி விற்பனைக்குழுவில் பணிநியமனம் செய்யப்பட்டமை - 23.12.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை-உழவர் நலத் (வேவி-1) துறை**

அரசாணை (3ப) எண்.9

நாள்:20.01.2025
திருவள்ளுவராண்டு – 2056
தைத் திங்கள் 7-ஆம் நாள்

படிக்கப்பட்டவை:

1 அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ1) துறை, நாள் 08.03.2023.
2 அரசு கடித எண்.3248/A2/2023-1, மனித வள மேலாண்மைத் (ஏ) துறை, நாள் 07.09.2023
3 வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக முதன்மைச் செயலாளர் / ஆணையரின் கடித எண்.விகுப3/ 2809/2021, நாள்:23.12.2024.

----

**ஆணை:**

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக முதன்மைச் செயலாளர் / ஆணையரின் கடிதத்தில் தேனி விற்பனைக்குழுவில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்த திரு கு.சுப்பிரமணியம் அவர்கள் 27.02.2020 அன்று இயற்கை எய்தியதைத் தொடர்ந்து, இறந்த அரசு ஊழியரின் வாரிசுதாரர்களில் ஒருவரும், அவருடைய மகளுமான திருமதி. சு.சுஜிதா அவர்கள் தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வேண்டி 04.01.2021 நாளிட்ட விண்ணப்பத்தில் கோரியிருந்தார் என்றும், அன்னாரின் மனைவி திருமதி S.கெங்கேஸ்வரி அவர்களும் தன்னுடைய மகள் திருமதி சு.சுஜிதா அவர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குமாறு 04.01.2021 நாளிட்ட விண்ணப்பத்தில் கோரியிருந்தார் என்றும், அவ்வாறு

(த.பி.பா)

விண்ணப்பித்தபோது தனியர் உரிய கல்வித் தகுதி மற்றும் வயது போன்ற தகுதிகள் பெற்றிருந்ததைக் கருத்திற்கொண்டு தம்முடைய செயல்முறை ஆணை எண்.விகுப3/2809/2021, நாள்:12.11.2022-இன்படி தேனி விற்பனைக்குழுவில் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு, தனியருக்கு தற்காலிக இளநிலை உதவியாளராக பணி ஒதுக்கீடு வழங்கப்பட்டு 23.12.2022 முற்பகல் முதல் தனியர் அப்பணியில் சேர்ந்துள்ளார் என்றும் தெரிவித்து, தனியரின் கல்வித் தகுதி மற்றும் அதன் உண்மைத்தன்மை சான்றிதழ்கள் உள்ளிட்ட ஆவணங்களை அரசுக்கு அனுப்பி தனியரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 23.12.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2) மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் மற்றும் பணிவரன்முறை தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் அடிப்படையில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக முதன்மைச் செயலாளர் / ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று தேனி விற்பனைக் குழுவில் கருணையடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி. சு.சுஜிதா என்பவரின் பணியை, அப்பதவிக்குரிய உடற்தகுதியை அவர் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தனியர் பணியில் சேர்ந்த நாளான 23.12.2022 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி அரசு ஆணையிடுகிறது.

3) திருமதி. சு.சுஜிதா, இளநிலை உதவியாளரின் பணி 23.12.2022 முற்பகல் முதல் அப்பதவியில், வரன்முறை செய்யப்படுவதால், அவர் வருடாந்திர ஊதிய உயர்வு மற்றும் சம்பள நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராவார் எனவும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வா
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக
முதன்மைச் செயலாளர் / ஆணையர், சென்னை-600 032.

செயலாளர், தேனி விற்பனைக்குழு, தேனி.
(வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக
முதன்மைச் செயலாளர் / ஆணையர், சென்னை-600 032
மூலமாக)
மாநிலக் கணக்காயர், சென்னை – 600 018/(பெயரில்)
முதன்மை மாநிலக் கணக்காயர் (G & SSA / E & RSA)
சென்னை-600 018
இருப்பிடத் தணிக்கை அலுவலர், முதன்மை மாநில
கணக்காயர் (பொது மற்றும் சமூகப்பிரிவு தணிக்கை)
அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-600 009.

நகல்
இயக்குநர், உள்ளாட்சி நிதிக்கணக்குகள் மற்றும்
தணிக்கைத் துறை, சென்னை-600 108.
வேளாண்மை-உழவர் நலத் (அநமு-3) துறை, சென்னை – 600 009.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

வே.கு.ந.க.எண் : அ/3115/2022, நாள் : .02.2025

நகல் சார்பு செய்யப்படுகிறது.

SECRETARY
THENI MARKET COMMITTEE
THENI

பெறுநர்
திருமதி. சு. சுஜிதா,
இளநிலை உதவியாளர்,
திருப்பூர் விற்பனைக்குழு,
திருப்பூர்